


மயிலிட்டி தெற்கு, கட்டுவனைப் பிறப்பிடமாகக் கொண்ட

அமரர்

# தம்பிப்பிள்ளை பாலசுப்பிரமணியம்

அவர்களின் சிவபதப்பேறு குறித்து வெளியிடப்பெறும்

# நினைவு மலர்

31-12-2022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



மலர்வு
26-07-1940

உதிர்வு
30-11-2022

அமரர்

# திரு. தம்பிப்பிள்ளை பாலசுப்பிரமணியம்

## திதிப் பாடல்

அருள் வழியும் திருமுகம் அழகு தவழ் புன்னகையும்
வருவிருந்து தேடும் வாழ் நிலையும் - உருக்கமுடன்
இறைவனடி போற்றும் இளநெஞ்சும் கொண்டுயர்ந்த
அறம் வளர்த்த K.T. பாலா சென்றார் இறையடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



மயிலிட்டி தெற்கு, கட்டுவனைப் பிறப்பிடமாகக்
கொண்ட

அமரர்

# திரு. தம்பிப்பிள்ளை பாலசுப்பிரமணியம்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

**31-12-2022**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# சமர்ப்பணம்

எமது குடும்பத்தின் அணையாத
தீபமாய் நின்று ஒளி தந்து
இவ்வுலகில் நாம் வாழ்வாங்கு வாழ
ஏற்ற வழிவகைகள் செய்து
வழிகாட்டி நின்று
இன்று வானுறையும்
தெய்வமாகிவிட்ட எம் குடும்ப
விளக்கின் பாதங்களில்
இந்நினைவு மலரினைச்
சூட்டி காணிக்கையாக்குகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!





இங்ஙனம்
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

## தேவாரம்

நத்தார்படை ஞானன்பசு ஏறிந்நனை கவிழ்வாய்
மத்தம்மத யானை உரி போர்தமண வாளன்
பத்தாகிய தொண்டர்தொழு பாலாவியின் கரைமேல்
செத்தார்எலும் பணிவான்திருக் கேதீச்சரத் தானே.

## திருவாசகம்

பால் நினைந்தூட்டும் தாயினுஞ்சாலப்
பரிந்து நீ பாவியேன் உடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்தமாய
தேனினைச் சொரிந்து புறம்புறம்திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவதினியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

கற்றவர் விளங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎம் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண்(டு) உள்ளம்
குளிரஎன் கண்குளிர்ந் தனவே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி யழுதிடப்
பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றுஅருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
தில்லைச் சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்கப்
பூதபரம் பரைபொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலித் திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

ஏறுமயி லேறிவிளை யாடுமுகம் ஒன்றே
ஈசருடன் ஞானமொழி பேசுமுகம் ஒன்றே
கூறுமடி யார்கள்வினை தீர்க்குமுக மொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுக மொன்றே
மாறுபடு சூரரை வதைத்தமுக மொன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுக மொன்றே
ஆறுமுக மானபொருள் நீயருளல் வேண்டும்
ஆதியரு ணாசலம் அமர்ந்தபெரு மாளே!

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்கமன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க
நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

அமரர்

# தம்பிப்பிள்ளை பாலசுப்பிரமணியம்

அவர்களின்

# வாழ்க்கை வரலாறு

ஈழத் திருநாட்டில் சைவமும், தமிழும் நிலைபெற்று நீடுவாழும் மயிலிட்டி தெற்கு கட்டுவன் கிராமத்தில் 26-04-1940ஆம் திகதி அவதாரம் செய்தார். இவர் தம்பிப்பிள்ளை, சின்னத் தங்கத்தின் சிரேட்ட புத்திரராவார். இவருடன் பாலசுந்தரம், அமிர்தலிங்கம், அன்னலட்சுமி என்னும் சகோதரர்கள் அவதாரம் செய்தனர். பாலசுந்தரம், சகுந்தலாதேவி என்பவரைக் கரம்பிடித்து சபிதா, சபேசன், கோபிதா என்னும் குழந்தைகளுடன் பிரான்சில் வாழ்ந்து வருகிறார். இவர் சில மாதங்களுக்கு முன் இலங்கை வந்து அண்ணாவைப் பார்த்துச் சென்றார். அமிர்தலிங்கம், சிலோசினி என்வரைக் கைப்பிடித்து சுமித்தா என்னும் மகளுடன் வாழ்ந்து வருகிறார். அன்னலட்சுமி, கணபதிப்பிள்ளை என்பவரை கைப்பிடித்து சயந்தன் உதயன், முகுந்தன் என்னும் பிள்ளை களுடன் வாழ்ந்து வருகிறார்.

இவர் தனது ஆரம்பக் கல்வியை பாலர் ஞானோதய கல்லூரியிலும் பின்னர் மகாஜனக் கல்லூரியிலும் கல்வியைத் தொடர்ந்தார். பின்னர் தொலைத் தொடர்பு சேவையில் இணைந்து கொழும்பில் கல்வி கற்று தொலைத் தொடர்பு துறையில் இணைந்து அனுராதபுரத்திலும் பின்னர் தெலைத் தொடர்பு பொறியியலாளராக வவுனியா, மன்னார், யாழ்ப்பாண மாவட்டங் களிலும் பணியாற்றினார். இவர் சிறந்த உதைபந்தாட்ட வீரராகவும் கலைத்துறை, பேச்சுப்போட்டி, வானொலி நாடகம், நாடகப் போட்டிகளிலும் பங்காற்றினார்.

1968 ம் ஆண்டு தனது மாமனான சாதாசிவம் - வியாழாச்சி தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரி சற்குணதேவியை திருமணம் செய்து கொண்டார். இவ் வாழ்கதையின் பயனாக பகீரதி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலபாரதி, பகீரதன் என்னும் மழலைச் செல்வங்கள் கிடைத்தன. இவ் வாழ்க்கை நீடித்து நிற்கவில்லை. வெறும் 4 வருடங்களில் மனைவியை புற்று நோய் காரணமாக இழக்க நேரிட்டது. இந்த ஆறாத்துயர் அவரை நடைப் பிணமாக்கி விட்டது. 6 மாதங்களே ஆன மகன் 2, 3 வயதான பிள்ளைகளையும் தாங்கும் நிலைமை அவருக்கு. இத்தனை துன்பங்களையும் அவரது மாமியார் வியாழாச்சி மாமனார் சதாசிவம், மச்சாள் சகுந்தலாதேவி மற்றும் சகோதரர்கள், உறவினர்களின் அரவணைப்பில் சற்று ஆறுதலடைந்தார். இறைபக்தியும், திட நம்பிக்கையும் அவர் இத்துயரில் இருந்து மீள உதவின. பிள்ளைகளுக்காக தன் வாழ்க்கையைத் தியாகம் செய்தார். மனைவியின் பங்கு பற்றல் இல்லாமை அவர் வாழ்க்கையில் பெரும் துன்பத்தை ஏற்படுத்தியது. மாமியார் வியாழாச்சி, மாமனார் சதாசிவம் அனைத்து பொறுப்புகளையும் ஏற்று பிள்ளைகள் சீராக வளர பெரிதும் உதவினர்.

1974ம் ஆண்டில் இருந்து எனது பயணம் பாலாவுடன் தொடர்ந்தது. எனது உடன்பிறப்பாக 2022-11-30ஆம் திகதி அவர் இறக்கும் வரை பழகும் பாக்கியம் கிடைத்தது. மீண்டும் பிறப்பு உண்டேல் அவரின் சகோதரனாகப் பிறக்க ஆண்டவனை வேண்டுகிறேன். 1974ம் ஆண்டு அவரின் மச்சாள் சகுந்தலா தேவியைக் கைப்பிடித்தேன். அவர் தன் அக்கா பிள்ளைகளை தன் பிள்ளைகள் போன்றே வளர்த்தார். அவருக்கு தாரிணி, தனுஜா, நந்தகோபன் என 3 பிள்ளைகள் கிடைத்தன. பாலாவின் பிள்ளைகள் மூன்று தன் பிள்ளைகள் மூனறு என ஆறு பிள்ளைகளுக்கும் தாயாக இருந்தார். ஆறு பிள்ளைகளுடன் ஒரு தாய் பிள்ளைகளாகவே வளர்ந்தனர். எந்தக் காலத்திலும் ஒரே பானையில் தான் சமையல், வீட்டுக்கு தேவையான அனைத்துப் பொருட்களையும் பாலாதான் கொண்டு வருவார். எந்த காலத்திலும் இருவரும் கணக்குப் பார்த்ததில்லை. என்னுடன் சொந்த சகோதரனாகவே பழகுவார். பிள்ளைகள் 6 பேருடனும் எந்த வேறுபாடும் காட்டமாட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டுச் சூழல் மாறியதால் எங்கள் உயிர் போன்ற மாமனார் அகால மரணமடைந்தார். அது எங்கள் குடும்பத்தில் பேரிடியாகவே அமைந்தது. அபயம் தேடி எத்தனையோ ஊர்கள், வீடுகள் மாறினோம். பிள்ளைகள் ஆறு பாடசாலைகள் மாற வேண்டி யேற்பட்டது. நாட்டுச் சூழல் காரணமாக நானும் இந்தியா போக நேர்ந்தது. அந்த நேரத்தில் முழுக் குடும்பத்தையும் தானே ஏற்றுக் கொண்டார். மன்னாரில் இருந்து சைக்கிளிலே வேண்டிய பொருட்களை கொண்டு வருவார். எக்காலத்திலும் பொருட்கள் தட்டுப்படாமல் நிரம்பி இருக்கும் நாட்டுச் சூழலால் வீடுகளை விட்டு வெளியேறிய போது அனைத்து சொத்துக்களையும் இழந்து விட்டோம். எனினும் மனம் தளராது பாடுபட்டார்.

தனது மூத்த மகள் பகீரதியை அவரின் மாமனார் மகன் சிவகுமாருக்கு திருமணம் செய்து வைத்தார். அவர்கள் சுவிற்சிலாந்திலும் பின்னர் கனடாவிலும் வசித்து வருகின்றனர். அவர்களுக்கும் சகானா, றொஜான் என்னும் இரு பிள்ளைகள் உள்ளனர். சகானா ஜோல் என்பவரைத் திருமணம் செய்து கொண்டார். பாலபாரதி உறவினரான மோகனதாஸ் என்பவரை திருமணம் செய்து கனடாவில் வசித்து வருகின்றார். அவர்களுக்கு கௌசிகா என்ற மகள் உண்டு. மகன் பகீரதன் சிவப்பிரியா என்பவரைத் திருமணம் செய்து மாதங்கி என்னும் மகளுடன் U.K இல் இருக்கிறார்.

நான் இந்தியாவில் இருந்து வந்த போது எனக்கு மீண்டும் ஆசிரியராகப் பணிபுரிய தனது செல்வாக்கைப் பயன்படுத்தி உதவினர். பொறியியலாளராகப் பணியாற்றிய காலத்திலும் உயர் உத்தியோகத்தர்களுடனும் சக உத்தியோகத்தர்களுடனும் நெருங்கிய சினேகபூர்வமான தொடர்பை வைத்திருந்தார். மன்னாரில் பணிபுரியும் போது இந்து இளைஞர் சங்கத்தின் செயலாளராக பணிபுரிந்தார். கோவில் வளர்ச்சியின் பெரிதும் பங்காற்றினார். சித்தி விநாயகர் கோயில் வளர்ச்சியில் பங்காற்றி னார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வவுனியாவில் பணியாற்றும் போது போர்ச் சூழல் காரணமாக வவுனியாவுக்கு வரும் உறவினர், நண்பர், ஊரவர்களுக்கு பெரிதும் உதவினார். அவர்களுக்கான பாஸ், தங்குமிடம் உணவு என அனைத்து உதவிகளும் செய்தார். ஊரின் வளர்ச்சிக்காக பல நிறுவனங்களுடன் பங்குபற்றி தொண்டாற்றினார்.

2007ம் ஆண்டு 2018 வரை 10 வருடங்கள் எனது மகள் தாரிணி ஆனந்தன் உடன் இந்தியாவில் தங்கியிருந்தார். எனினும் வருடாந்தம் அவரைப் பார்த்து வந்தோம்.

நெடுங்காலமாக நீரிழிவு, இரத்த அழுத்தம் காரணமாக அவஸ்தைப்பட்டு கடந்த 4 வருடங்களாக நடமாடும் தன்மையைப் படிப்படியாக இழந்துவந்தார். அவரின் மூத்த மகள் பகீரதி, கனடாவில் இருந்து வந்து கடந்த 3 வருடங்களாக பாராமரித்து உதவினார். கடைசிவரை கதைத்துக் கொண்டே 30.11.2022 இல் மாரடைப்பு காரணமாக சிவபதம் அடைந்தார். மகள் பாலபாரதி 3 மாதங்களுக்கு முன் வந்து அவருடன் சில காலம் இருந்தார். பகீரதன் இலங்கைக்கு வரமுடியாமை காரணமாக வரமுடியாமை கவலைக்குரியது.

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

**ந. யோகராசா**
**(சகலன்)**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயுமானவன்

"அப்பா" என்ற வார்த்தையில் தான் எத்தனை மந்திரங்கள். தந்தை என்பவர் ஆயிரம் ஆசான்களுக்கு சமமானவர். தன் குழந்தைகளுக்கு ஆலோசனை கூறுவதில் தொடங்கி, அனுபவ பாடங்களைப் புகட்டி சிறந்த குடிமகனாக வாழ வழிகாட்டி நிற்பவர் தந்தையே. "தந்தை சொல்மிக்க மந்திரமில்லை" என்னும் ஔவையின் வாய் மொழியில் கண்டோம் இப் பேருண்மையை. உழைப்பு, சேமிப்பு, தன்னம்பிக்கையின் வடிவம் தந்தை என்றால் மிகையாகாது.

அப்பா என்பது ஒரு அதிசய புத்தகம். அது கிடைக்கும் வயதில் நம்மால் புரிந்து கொள்ள முடிவதில்லை. புரிந்து கொள்ள நினைக்கும் போது அது கிடைப்பதில்லை.

என் வாழ்க்கையின் வழிகாட்டி நீங்கள். உலகில் எல்லோருக்கும் அப்பாக்கள் உண்டு. ஆனால் என் அப்பா எனக்கு எல்லோரையும் விட மேலானவர். காரணம் தன் வாழ்க்கையை தன் பிள்ளைகளுக்காக மட்டுமல்ல ஊருக்காகவும் அர்ப்பணித்த மாமனிதர்.

என் வாழ்க்கையில் என் மனதில் தன்னம்பிக்கையை ஆழமாக பதியச் செய்த பெருமைக்குரியவர் என் அப்பா. உன்னால் எதுவும் முடியும் என்று நம்பிக்கையை எனக்கு ஊட்டி வளர்த்த நற் தந்தை நீங்கள்.

ஒரு மனிதன் எத்தனை பெருமைக்குரியவன் என்பதற்கு முழு உதாரணமாக வாழ்ந்து காட்டியவர் என் அப்பா. எங்கள் மனதிற்கு உங்களைப் போன்று உலகில் வேறு யாராலும் வாழ்ந்து காட்ட முடியாது.

அப்பா நீங்கள் பழகிய அத்தனை நபர்களுக்கும் அவரவர் வாழ்க்கையில் ஏதோ ஒரு வகையில் நல்ல தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கின்றீர்கள் என்பதை அவர்கள் என்னுடன் தொலைபேசியில் பேசும் போது அறிந்து பூரித்து போனேன். இத்தனை பெருமைக் குரியவரின் பிள்ளையா நான் என்பதை நினைத்து என் வாழ்நாள் உள்ளவரை பெருமை கொள்வேன்.

எனக்கு அம்மா இல்லை என்ற ஒரு உணர்வை கூட என் வாழ்நாளில் நீங்கள் எனக்கு தந்ததில்லை. மன்னாரில் இருந்த காலத்தில் காலையில் எழுந்து சமைத்து, தலை சீவி பாடசாலைக்கு அனுப்பியது என்றும் என் மனதில் பசுமரத்தாணிபோல் பதிந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் முதல் நான் சைக்கிள் ஓட ஆசை என்று சொன்னவுடன் "உன்னால் முடியும்" என்று எனக்கு சைக்கிள் வாங்கி தந்து, நான் பலமுறை விழுந்து அழுத போதும் "உன்னால் முடியும் தம்பி முயற்சி செய்" என்று எனக்கு ஊக்கமளித்த கடவுளப்பா நீங்கள்.

மணியம் மாமா உங்களிடம் வந்து நான் சைக்கிள் ஓடி விழுந்து மேலும் ஏதாவது நடந்து விட்டால் என்ன செய்வீர்கள்? என்று கேட்ட போது எதைப் பற்றியும் யோசியாது "என் பிள்ளை யாரையும் நம்பி வாழக்கூடாது" தன் காலில் அவன் வாழ வேண்டும் என்று அவருக்கு பதில் சொன்னீர்கள். அதுதான் அப்பா நீங்கள் அன்று எனக்குத் தந்த நம்பிக்கை.

எனக்கு அன்று பகீரதன் என்று ஏன் பெயர் வைத்தீர்கள் என்று எனக்குத் தெரியாது. இன்று உளமார உணருகின்றேன். பகீரதப் பிரியத்தனம் என்ற பதத்தின் நாமத்தை.

என் வாழ்க்கையில் உங்களைப் பற்றி ஒருவர் கூட ஒரு குறையும் சொன்னதில்லை எப்படி அப்பா முடிந்தது 82 ஆண்டுகள் இப்படி ஒழுக்கத்துடனும் பண்புடனும் வாழ்வதற்கு. நீங்கள் கடந்து வந்த பாதையில் சந்தித்த அத்தனை மனிதர்களிடமும் அன்புடன் பழகியவர் நீங்கள்.

பாடசாலையில் ஆசிரியர்கள் மாணவர்களை அடிப்பதுண்டு. ஆனால் சக ஊழியர்களை நீங்கள் அடித்துள்ளீர்கள் என்பதை ஒருவர் என்னுடன் பேசும்போது அதை குறிப்பிட்டு சொன்னார். தன் தந்தை தன்னை அடிப்பது போல நான் உணர்ந்தேன் என்று பெருமையோடு சொன்னார்.

உங்களைப் போன்று புத்தகம் வாசிக்கும் திறன் கொண்டவர் களை நான் கண்டதில்லை. எந்த விடயத்தை எடுத்தாலும் அதைப்பற்றிய கணிசமான அறிவு கொண்டவர் நீங்கள். உங்களுக்கு இருந்த தமிழ் அறிவும் அதை உள்வாங்கும் திறனும் எல்லோருக்கும் இருந்ததில்லை. தமிழ்த்தாயை அதிகமாக நேசித்த நபர்களில் நீங்களும் ஒருவர். தமிழ் இலக்கியங்களை பொருட் பிழை இல்லாது விளக்கம் சொல்லக் கூடிய வல்லவர் நீங்கள்.

நற்தந்தையான மட்டும் அல்லாமல் ஒரு நல்ல நண்பனாக, ஒரு நல்லாசிரியனாக, ஒரு நம்பிக்கையின் நட்சத்திரமாக என் வாழ்க்கையில் நீங்கள் மிளிர்ந்துள்ளீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் கிராமத்தில் எல்லா வீடுகளிலும் ஏதோ ஒரு தாக்கத்தை நீங்கள் ஏற்படுத்தி KT என்ற ஈரெழுத்தோடு அவர் தம் மனங்களில் நன்மதிப்பைப் பெற்றிருந்தீர்கள். எப்படி அப்பா முடிந்தது எல்லோருக்கும் நல்லவனாக நீங்கள் வாழ்வதற்கு.

நாங்கள் உங்களை அப்பா என்று அழைத்ததை விட பலர் உங்களை பெரியப்பா என்று அழைத்தது தானே அதிகம். அவர்கள் உங்களை பெருமைமிகு உறவாக நினைத்தவர்கள்.

பிறப்பவர்கள் எல்லோரும் இறப்பது என்பது இயற்கையின் நியதி. இறந்த பின்பும் வாழ்வது என்பது எல்லோருக்கும் கிடைப்பதில்லை. நீங்கள் மறைந்தாலும் பலர் உள்ளங்களில் எப்போதும் வாழ்ந்து கொண்டிருப்பீர்கள் என்பது உறுதி.

நீங்கள் கடந்து வந்த பாதையில் பல மகத்தான மனிதர்களை பெற்றதுதான் நீங்கள் செய்த பாக்கியம். உங்களுக்குள் இருந்த இடதுசாரிச் சிந்தனை தான் உங்களை ஒரு மகத்தான மனிதராக இந்த உலகத்திற்கு காட்டியது.

என் அப்பா மிகச் சிறந்த மனிதர் என்பது எனக்கு எப்போதும் பெருமையே! ஏன் பெருமைக்குரியவர் என்று சொல்கிறேன் தெரியுமா? அவரைப் பிள்ளையாக, அண்ணனாக, தம்பியாக, தோழனாக, மைத்துனனாக, ஐயாவாக, தந்தையாக, பெரியப்பாவாக, மாமாவாக, அப்பப்பாவாக, தாத்தாவாக அழைத்தவர்கள் எல்லோருக்கும் உண்மையான அன்பைக் கொடுத்து, அவர்கள் நல்வாழ்விற்கு வழி காட்டியவர். அதனால் கர்வத்துடன் சொல்கிறேன்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்"

என்ற குறள் வழியில் வாழ்ந்து விண்ணுலகம் சென்ற தெய்வம் நீங்கள்.

நீங்கள் கொண்ட புகழ் எப்போதும் எங்கள் குலம் தாங்கும் என் வாழ்வில் ஆண் வடிவமாய் வந்த அன்னை நீங்கள்.

"மகன்தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை
என்னோற்றான் சொல்எனும் சொல்"

என்ற வள்ளுவனின் வாக்குகிணங்க வாழ்வேன் அப்பா.

**பாலபகீரதன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது வாழ்க்கையின் வழிகாட்டி

எனது அருமை அப்பாவே உங்களுக்கு நான் பிள்ளையாய் பிறந்தது பெரும் பாக்கியமே. அம்மாவிற்கு அம்மாவாய், அப்பாவிற்கு அப்பாவாய் இருந்து எங்களை கண்ணை இமை காப்பது போல் காத்தீர்கள்.

உங்கள் வாழ்க்கையின் இளமைக் காலத்தில் எங்கள் அம்மாவை இழந்தும், மறுமணம் செய்யாமல் உங்கள் வாழ்க்கையை எமக்காக தியாகம் செய்தீர்கள்.

நீங்கள் எங்களுக்கு கிடைத்த விலைமதிப்பில்லா பொக்கிஷம். எந்த தேசத்தில் தேடியலைந்தாலும் உங்களுக்கு நிகராக யாரும் என் கண்ணிற்கும், நினைவிற்கும் தெரிந்து இதுவரை தென்பட வில்லை. உங்களைப் போல ஒரு மாபெரும் பொக்கிஷத்தை இழந்தது மிகவும் கடுமையான மனவேதனை. இதனை வார்த்தை யிலும் எழுத்திலும் வர்ணிக்க இயலவில்லை.

நெஞ்சம் கனக்கிறது, இன்னும் பலகாலம் உங்களுக்கு சேவை செய்ய நேரம் தந்திருக்கலாம். ஏன் அவசரமாக எம்மை விட்டு மறைந்தீர்கள். உங்கள் இழப்பால் ஏற்பட்ட துயரம் ஏழு ஜென்மம் எடுத்தாலும் தொடர்ந்து வரும்.

அப்பா மீண்டும் பிறப்பு உண்டெண்றால் உன் பிள்ளையாகவே பிறக்கும் வரம் வேண்டும். கடவுள் நம்பிக்கை இல்லை எனக்கு ஆனால் உங்களிடம் 100 வீதம் நம்பிக்கை இருக்கிறது. எந்த பிறப்பிலும் என்னை உங்கள் பிள்ளையாக ஏற்றுக்கொள்வீர்கள் என்று.

உங்களை மீண்டும் தந்தையாக நான் அடைய நினைப்பற்கு பல காரணங்கள் உள்ளன. அப்பா அம்மா அண்ணா தம்பி மாமா தாத்தா பெரியப்பா தோழர் சகலன் ஒரு சிறந்த கல்விமான் கலைஞனும் கூட, இப்படி எத்தனை அவதாரங்களில் எம்மோடு உறவாடினீர்கள்.

இத்தனை பொறுப்பிலும் எந்த ஒரு குறையும் யாரும் கூறியது என் காதில் இதுவரை கேட்டதில்லை. இப்படி ஒருவருக்கு மீண்டும் பிறக்கும் பாக்கியம் வேண்டி, ஆத்மா சாந்தி அடைய வேண்டுகிறோம்.

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

**பால பகீரதி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர். தம்பிப்பிள்ளை பாலசுப்பிரமணியத்தின் நினைவு அலைகள்

இவர் தனது ஆரம்பக் கல்வியை கட்டுவன் மயிலிட்டி தெற்கு ஞானோதய வித்தியாசாலையிலும் பின்னர் மகாஜனக் கல்லூரியிலும் தொடர்ந்தார். சிறு வயதில் இருந்தே இறை நம்பிக்கையுடையவர். ஞானோதய வித்தியாசாலையில் கல்வி கற்கும் போது சுகாதார சேவையினரின் நாடக விழாவில் சிதம்பரநாதனின் சகோதரி இலட்சிமியுடன் இணைந்து இருவரும் சேர்ந்து சிறப்பாக நடித்தார்கள்.

எமது கிராமத்தின் இளம் சைவத் தொண்டர் சபையின் இணைக் காரியதரிசியாக கடமையாற்றினார். மகாஜனாக் கல்லூரியில் இவர் சிறந்த உதைப்பந்தாட்ட வீரராகவும் மெய் வல்லுனர் போட்டிகளிலும் பாராட்டைப் பெற்றார்.

தனது 21 வயதில் தொலைத் தொடர்பு திணைக்களத்தில் கடமையாற்றினார். அநுராதபுரம் கொழும்பு, மன்னார், வவுனியா போன்ற இடங்களில் டெலிக்கோம் சேவையில் பொறியியளாளராக இளைப்பாறும் வரை கடமையாற்றினார். உற்ற நண்பன், திரு. சங்கரலிங்கத்துடன் இணைந்து கடமையாற்றினார்.

இவர் சிறந்த கலைஞர் என்பதை வெளிப்படுத்த மேடை நாடகங்களில் பங்கேற்றார். இவரது நண்பரான ஆ. வ. பாலசுப்பிர மணியத்தின் மேடை நாடகங்களான மன்னன் மகள், அமரசிப்பி, பொலிடோல் பொன்னையா, போன்ற நாடகங்களில் பங்கேற்றார். இவர் நடித்த பார்வதி பரமசிவம் என்ற நாடகம் மிகவும் பிரசித்தி பெற்றது.

கிராம வளர்ச்சிக்காக பாலர் ஞானோதய கலை உடல் வளர்ச்சி கழகத்தின் உப தலைவராகவும் பாலர் ஞானோதய சங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயலாளராகவும், இளைஞர் விவசாய கழக தனாதிகாரி யாகவும் கடமையாற்றினார். ஒவ்வொருவரின் வாழ்க்கைக்கு ஒருவர் வழிகாட்டியாக இருப்பார். K. T. பாலசுப்பிரமணியத்திற்கும் A.V. பாலசுப்பிரமணியத்திற்கும் வழிகாட்டியாக வைத்தியர் சிதம்பரநாதன் இருந்தார். இவர்கள் மூவரும் எச்செயலையும் இணைந்து செய்வார்கள் கருமம் ஆற்றுவதில் துணிந்து இவர் செயல்படுவார்.

"எண்ணித்துணிக கருமம் துணிந்த பின்
எண்ணுவம் என்பது இழுக்கு"

என்ற மொழிக்கமைய வாழ்ந்து காட்டியவர். அவரது ஆன்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.

ஓம் சாந்தி.

ஆருயிர் நண்பன்
**A.V. பாலசுப்பிரமணியம்**

வெற்றி வேண்டுமானால், இடைவிடாத முயற்சியும்
தீவிர சங்கல்பமும் உங்களிடம் வேண்டும்.

தன்னம்பிக்கையை இழக்கின்ற அக்கணமே ஒருவன்
அழிகிறான். நாடும் அவ்வாறே.

உன்னை நம்பு ; எல்லா ஆற்றலும்
உன்னிடமே உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி மறப்பது நன்றன்று

அமரர் K.T. பாலசுப்பிரமணியம் அவர்கள் தனது ஆரம்பக் கல்வியை கட்டுவன் பாலர் ஞானோதய வித்தியாசாலையிலும் தொடர்ந்து தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியிலும் கல்வி பயின்றார். மிகவும் ஏழ்மையான குடும்பத்தில் பிறந்த இவர் தனது புத்திக்கூர்மையினால் கணிதபாடத்தில் மிகவும் திறமையுள்ள வராக இருந்தார். அத்துடன் நல்ல மொழி ஆற்றலும் பெற்றிருந்தார்.

சக மாணவர்களுக்கும் கணித பாடத்தை விரும்பிக் கற்பதற்கு உதவியாக இருந்து ஊக்குவித்தார். இத்தகைய செயற்பாட்டால் ஆசிரியர்களிடமும் அயலவர்களிடமும் நன்மதிப்பினைப் பெற்றிருந் தார்.

இக்காலப் பகுதியில் எமது ஊர் வீரபத்திரர் ஆலயத்திற்கு தினமும் மாலை நேரத்தில் சென்று விளக்கு வைத்து வழிபட்டு வந்தார். வீரபத்திரரின் அருளும் ஆசியும் அவருக்கு கிடைத்தமை யினால் ஆர்வத்துடன் கல்வி கற்று பொறியியலாளராக தொலைத் தொடர்புத் திணைக்களத்தில் பணிபுரிந்தார்.

மகாஜனக் கல்லூரியில் கல்வி பயின்ற காலகட்டத்தில் மாணவ தலைவர்களில் ஒருவராகவும், ஒரு சிறந்த உதைபந்தாட்ட வீரனாகவும் திகழ்ந்தார். ஒருமுறை கல்லூரிகளுக்கிடையிலான உதைபந்தாட்ட போட்டி முத்தவெளி மைதானத்தில் நடைபெற்றது. பந்துக் காப்பாளராக இருந்த இவர் அவரை நோக்கி வந்த பந்தைப் பிடித்து அடித்தபோது அது மறுபக்கத்தில் கோல் ஆக மாறியது. மேலும் யாழ் மாவட்டப் பாடசாலைகளுக்கிடையே நடாத்தப்படும் பாடசாலை மட்ட பேச்சுப் போட்டி, நாடகப் போட்டிகளில் பங்குபற்றி பல பரிசில்களைப் பெற்று பாடசாலைக்கும் எமது ஊருக்கும் பெருமை பெற்றுத் தந்தமை குறிப்பிடத்தக்கது.

எமது கிராம முன்னேற்றத்திற்காக அயராது உழைத்து பாலர் ஞானோதய சங்கத்தின் செயலாளராகவும், தலைவராகவும் நீண்ட காலம் பதவி வகித்து அர்ப்பணிப்புடன் பணியாற்றினார்.

**வ. இராசதுரை**
செயலாளர், பாலர் ஞானோதய சங்கம்
கட்டுவன், மயிலிட்டி தெற்கு வர்த்தலைவிழான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதநேயம் மிக்கவர் K.T பாலா

K.T பாலா அவர்களை அவரின் மாணவப் பருவத்திலிருந்தே அறிவேன். அவர் உரையாடும் போதெல்லாம் பிறப்பும் இறப்பும் இயற்கையின் நியதி. வரும் போது எதையும் கொண்டு வந்த தில்லை போகும் போது எதையும் கொண்டு போவதும் இல்லை. எனவே வாழ்வு "சவ" வாழ்வாக அன்றி "சிவ" வாழ்வாக அமைய வேண்டும் என்பார் சொல்வதோடு நில்லாமல் சொல்லிய வண்ணம் வாழ்ந்தும் காட்டினார்.

நல் ஒழுக்கத்தை தன் உயிரினும் மேலாக ஓம்பினார். அன்பைப் பொழிந்து மனித நேயம் கனிந்தவராக வழ்ந்தார். அறிவு தான் வாழ்வாங்கு வாழ்வதற்கு வழிகாட்டும் என்பதனை உணர்ந்து செல்லும் வகையிலெல்லாம் அறிவைத் தேடி வளர்த்துக் கொண்டார். கடமையே கண்ணாயினார். இயன்ற அளவுக்கு பிறருக்கு நன்மை செய்து பயனுள்ள வாழ்க்கையை வாழ்ந்தார். அவருடைய அன்பு ஈன்ற ஆர்வமுடைமையால் ஏற்பட்ட நட்பு எனும் நாடாச்சிறப்பு தன்னூர் அயலூர் என்பதற்கு மேலாக தான் தொழில் புரிந்த கொழும்பு, மன்னார், வவுனியா, யாழ்மாவட்டம் என எல்லை கடந்து பல்கிப் பெருகியது. அவர் பழகிய அத்தனை பேராலும் அன்புடன் நேசிக்கப்பட்டார். அவர் நோயால் வருந்திய போது அவரது சகலன் யோகராசா குடும்பத்தினர் மிகுந்த அன்போடு ஆதரித்தார்கள். இறுதியில் அவருடைய மூத்த மகள் பகீரதி செய்த அன்பான பணிவிடை மகத்தானது. அற்புதமானது நினைப்பவர் நெஞ்சை உருக்குவது. அந்த மனிதம் நிறைந்த அவரது எச்சம் அவர் தக்கார் என அறிவதற்கான சுட்டி.

அன்புடைமைபோன்று அறிவுடைமையும் அதி உன்னத மானது மரபணு மூலம் இயற்கையாக பெற்றிருந்த நுண்ணறிவு மூலம் எங்கெல்லாம் அறிவை தேடமுடியுமோ அங்கிருந்தெல்லாம் அறிவை பெற்றுக் கொண்டார். மகாஜனக் கல்லூரி ஆசிரியர் களிடமிருந்தும், புறக்கிருத்தியச் செயற்பாடுகளில் இருந்தும் அறிவைப் பெற்றுக் கொண்டார். பண்டிதர் நமசிவாயம் ஐயா, நாகலிங்கம் ஆசிரியர் போன்ற அறிஞர்கள் சங்கமத்தினூடாக அறிவை பெற்றுக் கொண்டார். நூல்களை தேர்ந்தெடுத்து கருத்தூன்றி வாசிப்பதன் மூலம், அறிவைத் தேடிக் கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமிய பொது நிறுவனங்களினூடாகவும் அறிவைப் பெற்றுக் கொண்டார்.

சிறுவயது முதல் இறுதி வாழ்வு வரைப்பட்ட சம்பவங் களினால் பட்டறிவையும் பெற்றுக் கொண்டார். அறிவின் மலர்ச்சி யினால் பயமின்மை, துணிவு, தளராத, சலியாத, கலங்காத, மனோ வலிமை, வைராக்கியம், தன்னம்பிக்கை போன்ற சிறந்த ஆளுமைப் பண்புகள் வலுப்பெற்றன. பரந்து விரிந்த மனப்பாங்கு உரு வாகியது. சிந்தனைகள் சர்வதேச மயப்பட்டதும் மனித குலம் முழுமைக்கு மானதாகப் பரந்தது. இதனால் மாக்சிய தத்துவத்தில் பற்றுதி கொண்டார். ஈழத்தில் இடதுசாரி முற்போக்கு அரசியற் கொள்கைவயப்பட்டார். பொது நிறுவனங்களுடாக மக்கள் நலனுக் காக, தனது இயல்பளவுக்கு ஏற்ப உடல், பொருள், அறிவைத் தானம் செய்து சேவை செய்தார். இளைஞர்களின் விளை யாட்டுத்துறை வளர்ச்சிக்கு உதவி சிறந்த தலைமைப் பண்பு களைப் பெற்றுக் கொள்ள உதவினார். பாலர் ஞானோதயா கழகத்தை உருவாக்கி, ஆர்வத்தோடும் அர்ப்பணிப்போடும் அவர் ஆற்றிய சேவையை, நினைவு கூர்ந்த புலம்பெயர் உறவுகள், அவரது இறுதியாத்திரையின் போது அவருக்கான அனுதாப பதாகையை வெளியிட்டு கௌரவித்தனர். அன்னாரது நெஞ்சுறு திக்கும் மனித நேயத்துக்கும் என் முகதாவில் நடைபெற்ற ஒரு சம்பவம் நினைவுகூரத்தக்கது. தேர்தல் அபேட்சகரின் முகவர் களாக நாம் கடமையாற்றியபோது அவரின் உறவினர்கள், ஊரவர்கள் பலர் முறைகேடாக வாக்களிப்பதற்கு வந்திருந்தனர். அதனை ஆதாரங்களுடன் அதிகாரிகளுக்கு சுட்டிக் காட்டினார். வாக்களிப்பு தடுக்கப்பட்டது. அவர்களை காவல்துறையினரின் தண்டனைக்குள்ளாகாமல் தடுத்து வீடு செல்வதற்கு ஆவன செய்தார். பிறர்க்கு நன்மை செய்தால் நன்மையே விளை பயனாகும். என்ற அவரது இறுதிக் குரலை எமது நெஞ்சங்களில் நினைவு அழியாது நீடித்து நிலைத்திருக்கச் செய்வோம், என்பதே நாம் அவருக்குச் செலுத்தும் அனுதாபமாகும். அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போம்.

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

அன்புள்ள நண்பன்

**T.V கிருஷ்ணசாமி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மச்சாள் சகுந்தலாதேவி புலம்பல்

எனது அப்பா சதாசிவத்தின் உடன் பிறப்பான சின்னம்மாவின் சிரேட்ட புத்திரரான K.T என எல்லோராலும் அழைக்கப்படும் பாலசுப்பிரமணியம் எங்கள் வீட்டுக்கு அடிக்கடி வருவார் அப்போது எங்களுக்கு ஆண்பிள்ளை இல்லாக் குறையை தீர்த்து வைத்தார். பின்பு எங்களுக்கு அத்தானாக என் அக்காவை விரும்பி எல்லாருடைய விருப்பத்துடனும் திருமணம் செய்து சந்தோசமாக வாழ்ந்து வந்தார் முதலில் கொழும்பில் எங்கள் மாமா சின்னத்துரை (பத்தாயிரம்) அவர்களுடன் இரு வருடங்கள் சந்தோசமாகா வாழ்ந்தார் பின்னர் அனுராதபுரத்தில் தொழில் காரணமாக இரண்டு வருடங்கள் கழிந்தன விதிவசமாக அவர் தன் மனைவியின் நோய் காரணமாக மனைவியை இழக்க நேரிட்டது. இதனால் எங்கள் முழுக்குடும்பமே தாங்கமுடியாத துன்பத்தில் ஆழ்ந்தது.

அத்தான் என்னை "மச்சி" என்றே அழைப்பார். சிறுவயதில் இருந்தே அத்தானை எனக்கு நன்கு பிடிக்கும் அவர் வீட்டுக்கு வந்தால் அவரை அவரின் வீட்டுக்கு போக விடமாட்டேன். அவர் என்னை தூங்க வைத்துவிட்டுத்தான் போவார்.

அவர் சிறுவயதில் மனைவியை இழந்தும் வேறு திருமணம் செய்யாமல், அவரின் பிள்ளைகளுக்கும் எங்களுக்கும் துணை யாகவும் அவருக்கு நாங்கள் துணையாகவும் வாழ்ந்து வந்தோம். எனது அப்பா இறந்த பின் எங்கள் குடும்பத்துக்கு அப்பாவாக வாழ்ந்து வந்தார். 30.11.2022இல் எங்கள் எல்லோரையும் துயரத்தில் ஆழ்த்திவிட்டு கதைத்துக் கொண்டே மாரடைப்பால் இறைவனடி சேர்ந்தார்.

சுபம் சுபம்

**மச்சி**
**யோ. சகுந்தலாதேவி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளையார் சுழிபோட்டு

பிள்ளையார் சுழிபோட்டு - நீ
நல்லதைத் தொடங்கி விடு
வள்ளலார் கணபதியின் - நல்
ஆசியும் அருளும் கிடைத்து விடும்
(பிள்ளையார்)

ஊர் தோறும் குளத்தடியில் - நம்
கணபதி அமர்ந்திருப்பார்
ஒவ்வொரு மனிதனது - நல்
உள்ளத்திலும் குடியிருப்பார்
எல்லோரும் நலம்காண எண்ணுகின்ற மனிதருக்கு
எந்நாளும் விநாயகனின் - திருவருள்
துணையிருக்கும்
தினம் தினம் மனம் குதிக்கும் - அவன்
அருள் நலம் சேர்க்கும்
(பிள்ளையார்)

பெற்றோர் மேலான - உலகம்
இல்லை என்றால்
கற்றோர்க்கு மேலான - பெரியோர்
இல்லை என்றார்
நர்த்தன விநாயகனை நாளும் தொழும் போது
அர்த்தம் புரிந்துவிடும் திருவருள் துணையிருக்கும்
தினம் தினம் மனம் துதிக்கும் - அவன்
அருள் நலம் சேர்க்கும்.
(பிள்ளையார்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நமசிவாய நமசிவாய

பெ : நமசிவாய நமசிவாய ஓம் நமசிவாய
நமசிவாய நமசிவாய ஓம் நமசிவாய

ஆ : ஹரஹர சிவனே அருணாசலனே அண்ணா -
மலையே போற்றி - சிவ ஓம் நமசிவாய

சிவ சிவ ஹரனே கோனாச்சலனே
அண்ணாமலையே போற்றி - ஹர ஓம் நமசிவாய

பெ : அனலே நமசிவாயம் - அழவே நமசிவாயம்
கனலே நமசிவாயம் - காற்றே நமசிவாயம்

ஆ : புலியின் தோலை இடையில் அணிந்த
புனிதக் கடலே போற்றி - சிவ ஓம் நமசிவாய

கலியின் தீமை யாவும் நீக்கும்
கருணைக் கடலே போற்றி - ஓம் நமசிவாய

பெ : புனலே நமசிவாயம் - பொருளே நமசிவாயம்
புகழே நமசிவாயம் - புனிதம் நமசிவாயம்.

ஆ : (நமசிவாய)
பெ : (நமமசிவாய)

## ஆயர் பாடி

ஆயர்பாடி மாளிகையில் தாய் மடியில் கன்றினைப்போல்
மாயக் கண்ணன் தூங்குகிறான் தாலேலோ
அவன் வாய்நிறை மண்ணை உண்டு
மண்டலத்தை காட்டிய பின்

ஓய்வெடுத்து தூங்குகிறான் ஆராரோ
ஓய்வெடுத்து தூங்குகிறான் ஆராரோ (ஆயர்பாடி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னலிட்ட கோபியரின் கன்னத்திலே கன்னம்வைத்து
மன்னவன் போல் லீலை செய்தான் தாலேலோ
அந்த மந்திரத்தில் அவன் உறங்க மயக்கத்திலே
இவனுறங்க
மண்டலமே உறங்குதம்மா ஆராரோ
மண்டலமே உறங்குதம்மா ஆராரோ (ஆயர்பாடி)

நாகபடம் மீதினில் அவன் நர்த்தனங்கள் ஆடியபின்
தாகமெல்லாம் தீர்த்துக்கொண்டான் தாலேலோ
அவன் மோன நிலைகூட ஒருயோக நிலை போலிக்கும்
யார் அவனைத் தூங்க விட்டார் ஆராரோ
யார் அவனைத் தூங்க விட்டார் ஆராரோ. (ஆயர்பாடி)

கண்ணன் அவன் தூங்கி விட்டால் காசினியே
தூங்கிவிடும்
அன்னையரே துயில் எழுப்ப வாரீரோ
அவன் பொன்னழகை பார்ப்பதற்கும்
போதை முத்தம் கேட்பதற்கும் (ஆயர்பாடி)

கன்னியரே கோபியரே வாரீரோ
கன்னியரே கோபியரே வாரீரோ. (ஆயர்பாடி)

## ஆதிசக்தி ஆதிசக்தி ஆதிசக்தியே

ஆதிசக்தி ஆதிசக்தி ஆதிசக்தியே
ஏதுசக்தி உன்னை யன்றி காவல்சக்தியே

குங்குமத்தில் குடியிருக்கும் குங்குமசக்தி
மஞ்சளிலே நிறைந்திருக்கும் மங்கள சக்தி
வேப்பிலையில் மறைந்திருக்கும் மூலிகைச் சக்தி
வேண்டுதலை தீர்க்கவரும் தாயெனும் சக்தி (ஆதிசக்தி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புற்றினிலே படமெடுக்கும் பாம்பெனும் சக்தி
பூவுலகை ஆட்சிசெய்யும் அம்மனின் சக்தி
சூலத்தினை ஏந்திவரும் வீரத்தின் சக்தி
வேலனுக்கு வேல் கொடுத்த தாயெனும் சக்தி
(ஆதிசக்தி)

ஆதி அந்தம் இல்லாத ஆதியின் சக்தி
ஆதி சிவன் பாதி என வாழ்ந்திடும் சக்தி
சிங்கத்திலே ஏறிவரும் சிம்மத்தின் சக்தி
சிந்தையிலே நிறைந்திருக்கும் தாயெனும் சக்தி
(ஆதிசக்தி)

தாலிவரம் தருபவளே தாலியின் சக்தி
காளி என மாறிவரும் உத்தம சக்தி
நாகமென ஆடிவரும் நந்தினி சக்தி
மேகமென மழை பொழியும் தாயெனும் சக்தி.
(ஆதிசக்தி)

## கனவில் கருவாகி

கனவில் கருவாகி புனலில் உருவான
கந்தன் ஊர் எந்த ஊர் - 2
கணமும் மறவாமல் தினமும் நினைக்கின்ற
மனிதர்களின் சிந்தை ஊர் - 2
கனவில்.....

குன்றங்களில் கோயில் கொண்ட வடிவேலன்
கண்ட சுகம் என்னவோ
தொண்டர் பல பேரும் கொஞ்சும் தமிழ் பாடல்
தந்த சுகம் அல்லவோ
கனவில்....

உருகி அவன் பெயரை உரைக்கும் பலபேரும்
அடையும் பலன் என்னவோ - 2
கருகி துயர் ஓட கவலை பறந்தோட
பெருகும் அருள் அல்லவோ
கனவில்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகன் குமரன் நல்லாவினன் குடி தன்னில்
கிழவன் பெயர் கொண்டதேன்
பழகும் தமிழ் பாட்டி ஔவை மூதாட்டி
பழம் நீ எனச் சொன்னதால் - 2
ஞானப் பழம் நீ எனச் சொன்னதால்.

கனவில்...

## வைரவர் பாடல்

ஆதிமூல நாதனே பால வைரவா
ஆதி சிவன் பாலனே ஞான வைரவா
திரிசூல நாதனே பால வைரவா
தில்லை நாதன் பாலனே பாலவைரவா

வடைமாலை தரித்தவரே பாலவைரவா
வரம் தந்து காருமையா பாலவைரவா
சுடலை நடனம் ஆடியவா ஞானவைரவா
சுத்தசிவமானவரே ஞானவைரவா

பிள்ளையாரின் தம்பியாரே பாலவைரவா
பிழைகள் எல்லாம் பொறுத்தருள்வாய்
வேலவனின் தம்பியரே ஞானவைரவா
வேதனைகள் தீர்திடுவாய் ஞானவைரவா

ஐயனாரின் அண்ணாரே ஞானவைரவா
ஐயங்களை போக்கிடுவாய் ஞானவைரவா
கவன வாகனம் கொண்டவரே பாலவைரவா
சூழ்ச்சிக்கெல்லாம் ஆனவரே ஞானவைரவா

கந்தர்மடம் மீதமர்ந்த ஞானவைரவா
எம் கவலைகளை தீர்த்திடுவாய் ஞானவைரவா
உன்னடியார் துயர் தீர்த்த பாலவைரவா
உடன் இருந்து காத்திடப்பா பால வைரவா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுந்தர அனுமான்

சுந்தர அனுமான் சுகம் தருவான்
சேவிக் சேவிக்க நலம் தருவான்
அந்தமும் ஆதியும் கடந்து நின்று
அன்பரைக் காத்திட முன்வருவான் (சுந்தர)

ரகு குலம் காத்திட பெருவீரன்
இராமனுக் கினிய பெருந்தொண்டன்
கலங்கிடும் கலியுக மக்களுக்கு
கலங்கரை விளக்காய் வந்திடுவான் (சுந்தர)

கலங்கரை விளக்காய் அனுமானை
அனுதினம் பாடி நாம் பணிந்தால்
அட்டா சித்தி கைகூடும்
அல்லல் வினைகள் பறந்தோடும் (சுந்தர)

தீயதை பாரினில் அழிப்பதற்கு
திரு நிறை பக்தியை வளர்ப்பதற்கு
கலியுகம் தன்னில் தனித்தெய்வம்
சுந்தர அனுமான் அவன் தானே (சுந்தர)

சனிதோறும் அனுமானைப் பணிந்து நின்றால்
சனியெனும் ஈஸ்வரன் அவன் தானும்
அன்புடன் அவனிடம் கட்டுப்பட்டால்
அன்பான வாழ்வு அவன் தருவான் (சுந்தர)

பக்தியை வளர்த்திட ராமனையும்
பாரினில் கை கண்ட அரு மருந்து
அரு மருந்தினை நீ அருந்தி
அவன் பிறப்பினை அறிந்திடுவாய் (சுந்தர)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐயப்பன் தோத்திரங்கள்

கன்னிமூல கணபதியை வேண்டிக்கிட்டு - நாங்க
கார்த்திகை முதல் தேதி மாலை இட்டோம்
ஐயப்பா ஐயப்பா என்றே சொல்லி - நாங்க
ஆறுவாரம் தானே நோன்பிருந்தோம். (கன்னி)

எங்க குருசாமி துணைகொண்டு அவர் பாதம் நம்பிக்கிட்டு
இருமுடியை சுமந்துகிட்டு வந்தோமய்யா
ஆறுபடை வீடு சென்று கந்தனையே வேண்டிக்கிட்டு
யாத்திரையாய் நடந்து வந்தோமய்யா (கன்னி)

குருவாயூர் கோயில் முதல் கன்னியாகுமாரி வரை
தரிசனமே செய்துவிட்டு வந்தோமய்யா
எருமேலிபேட்டை துள்ளி வாவரையே வேண்டிக்கிட்டு
பேரூர் தோட்டில் பொரிபோட்டு வந்தோமய்யா ((கன்னி)

காளைகட்டி அஞ்சல் வந்து அழுதாமலை ஏறிக்கிட்டு
கரிமலையின் உச்சியிலே வந்தோமய்யா
பம்பையிலே குளிச்சிப்புட்டு பாவங்களைத்
தொலைச்சுப்புட்டு
சபரிமலை ஏறிக்கிட்டு வந்தோமய்யா (கன்னி)

பதினெட்டாம் படிதாண்டி பகவானே உனைவேண்டி
கற்பூர ஜோதிதனைக் கண்டோமய்யா
மகரஜோதியைக் கண்டு மனமாரச் சரணம் போட்டு
மணிகண்டா உம் மகிமை அறிந்தோமய்யா. (கன்னி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ ஐயப்பன் கவசம்

## காப்பு

அரிஹர புத்ரனை ஆனந்த ரூபனை
இருமூர்த்தி மைந்தனை ஆறுமுகன் தம்பியை
சபரிகிரீசனை சாந்தஸ்வரூபனை
தினம் தினம் போற்றி பணிந்திடுவோமே. (1)

ஐயப்ப தேவன் கவசமிதனை
அனுதினம் சொல்ல அல்லல்கள் ஒழியும்
தினந்தினம் துதிக்கத் தீரும் வினையெல்லாம்
நாடிய பொருளும் நலமும் வருமே (2)

மண்ணுலகெல்லாம் காத்தருள் செய்ய
மணிகண்ட தேவா வருக வருக
மாயோன் மைந்தா வருக வருக
ஐங்கரன் சோதரா ஐயப்பா வருக (3)

புலிவாகனனே வருக வருக
புவியெல்லாம் காத்திட வருக
பூரணை நாதனே வருக வருக
புண்ணியமூர்த்தியே வருக வருக (4)

பூத நாயகா வருக வருக
புஷ்களை பதியே வருக வருக
பொன்னம்பலத்துறை ஈசா வருக
அடியாரைக் காக்க அன்புடன் வருக (5)

வருக வருக வாசவன் மைந்தா
வருக வருக வீரமணிகண்டா
வஞ்சனை நீக்கிட வருக வருக
வல்வினை போக்கிட வருக வருக (6)

ஐயம் தவிர்த்திட ஐயப்பா வருக
அச்சம் அகற்றிட அன்பனே வருக
இருவினை களைந்தே எனையாட்கொள்ள
இருமூர்த்தி மைந்தா வருக வருக (7)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதினெண்படியை மனதில் நினைக்க
பண்ணி பாவம் பொடிப் பொடியாகும்
ஐயப்பா சரணம் என்றே கூறிட
ஐம்பூதங்களும் அடிபணிந்திடுமே (8)

சபகிரீசனை நினைத்தே நீரிடத்
துன்பங்கள் எல்லாம் தூள் தூளாகும்
சரணம் சரணம் என்றே கூறிட
சித்திகள் யாவும் வந்தடைந்திடுமே (9)

பம்பையின் பாலன் பெயர் சொல்லிடவும்
பகைவர்க ளெல்லாம் பணிந்தே வணங்குவர்
ஐயப்பன் பாதம் அனுதினம் நினைக்க
அவனியிலுள்ளோர் அடி பணிந்தேத்துவர் (10)

சரணம் சரணம் ஐயப்பா சரணம்
சரணம் சரணம் சபரி கிரீ சா
சரணம் சரணம் சற்குரு நாதா
சரணம் சரணம் ஸ்வாமியே சரணம். (11)

## வேண்டுதல்

சிவனார் மகன் என் சிரசினைக் காக்க
நெடுமால் மைந்தன் நெற்றியைக் காக்க
கஜமுகன் தம்பி என் கண்ணினைக் காக்க
நாராயணன் பாலன் நாசியைக் காக்க (12)

இருமூர்த்தி மைந்தன் என் இருசெவி காக்க
வாபரின் தோழன் வாயினைக் காக்க
பம்பையின் பாலன் பற்களைக் காக்க
நான்முகப் பூஜ்யன் நாவினைக் காக்க (13)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலியுக வரதன் என் கழுத்தினைக் காக்க
குமரன் தம்பி என் குரல்வளை காக்க
புஷ்களை நாதன் புஜங்களைக் காக்க
முக்கண்ணன் பாலன் முழங்கையைக் காக்க (14)

வீரமணி கண்டன் விரல்களைக் காக்க
மணிகண்ட தேவன் மார்பினைக் காக்க
கயிலை மைந்தன் கைகளைக் காக்க
வன்புலி வாகனன் வயிற்றினைக் காக்க (15)

முழுமுதற் கடவுள் என் முதுகினைக் காக்க
இருமுடிப்பிரியன் என் இடுப்பினைக் காக்க
பிரம்பாயுதன் என் பிட்டங்கள் காக்க
தர்ம சாஸ்தா என் தொடையினைக் காக்க (16)

முருகன் சோதரன் முழங்கால் காக்க
கற்பூர ஜோதி என் கணைக்கால் காக்க
பந்தள பாலன் பாதத்தினைக் காக்க
விஜய குமரன் விரல்களைக் காக்க (17)

அன்னதானப் பிரபு அங்கமெல்லாம் காக்க
ஆரியங்கா ஜோதி அன்புடன் காக்க
காட்டாளரூபி காலையில் காக்க
நவக்ரஹநாதன் நடுப்பகல் காக்க (18)

மாலின் மகனார் மாலையில் காக்க
அரிஹர சுதனார் அந்தியில் காக்க
இன்பமய ஜோதி இரவினில் காக்க
எரிமேலி சாஸ்தா என்றுமே காக்க (19)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரியின் மகனார் அனுதினம் காக்க
நடராஜன் பாலன் நாள்தோறும் காக்க
வாசவன் செல்வன் வலப்புறம் காக்க
இருமுடி ஈசன் இடப்புறம் காக்க (20)

காக்க காக்க கருணையால் காக்க
பார்க்கப் பார்க்க என் பாபம் பொடிபட
இம்மையும் மறுமையும் இல்லா தொழிந்திட
ஈசன் மகன் எனை என்றுமே காக்க (21)

கொடிய விலங்குகளும் கொள்ளை நோய்களும்
குருதியைக் குடிக்கும் துஷ்டப் பேய்களும்
காந்த மலை தனைக் கருத்தில் கொண்டிட
கலங்கி மறைந்திடக் கருணை புரிவாய் (22)

பில்லி சூனியம் பலவித வஞ்சனை
பம்பையின் பாலன் பெயர் சொல்லிடவும்
பஞ்சாய்ப் பறக்க வரமெனக் கருள்வாய்
பயங்களைப் போக்கி அபயம் அளிப்பாய் (23)

வாதம் பித்தம் சிலேட்சுமத்துடனே
வாந்தியும் பேதியும், வலிப்பும் சுளுக்கும்
எவ்வித நோயும் எனையனுகாமல்
என்றுமே காப்பாய் எருமேலி தேவா (24)

கல்வியும் செல்வமும் கள்ளமில்லா மனமும்
நல்லோர் உறவும் நாளும் அருள்வாய்
நல்ல மனத்துடன் உனை நான் துதிக்க
நித்தமும் அருள்வாய் சபரிகிரீசா (25)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காமம் குரோதம் லோபம் மோஹம்
மதமாச்சார்யமெனும் ஐம்பெரும் பேய்களும்
என்றுமே என்னை அணுகி விடாமல்
ஐயப்ப தேவா வரமெனக் கருள்வாய் (26)

சூது பொறாமை பொய் கோபமில்லாமல்
சோரம் லோபம் துன்மார்க்கம் அல்லாமல்
வேதநெறிதனை விலகி நில்லாமல்
வீரமணி கண்டா வரமெனக் கருள்வாய் (27)

மூப்பும் பிணியும் வறுமையும் பசியும்
வந்தெனை வாட்டி வதை செய்யாமல்
உள்ளன்புடனே உன் திரு நாமம்
அனுதினம் சொல்ல அருள் தருவாயே! (28)

## நமஸ்காரம்

அரிஹர புத்ரா அன்பனே நமோ நமோ
சபரிகிரீசா சாஸ்தா நமோ நமோ
பதினெண்படி வாழ் பரமா நமோ நமோ
ஐங்கரன் சோதரா ஐயப்பா நமோ நமோ (29)

பொன்னம்பலத் துறை புண்ணியா நமோ நமோ
புலிப்பால் ஈந்த புண்ணியா நமோ நமோ
கரிகா யுதமுடைச் சுந்தரா நமோ நமோ
மஹிஷி மார்த்தனா மணிகண்டா நமோ நமோ (30)

சரணம் சரணம் சபரி கிரீசா
சரணம் சரணம் சத்ய ஸ்வரூபா
சரணம் சரணம் சர்வ தயாளா
சரணம் சரணம் ஸ்வாமியே சரணம் (31)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள்மிகு ஸ்ரீ ஐயப்பன்
# நூற்றெட்டு சரணக்கோவை

ஓம் கன்னிமூல கணபதி பகவானே சரணம் ஐயப்பா
ஓம் காந்தமலை ஜோதியே சரணம் ஐயப்பா
ஓம் ஹரிஹர சுதனே சரணம் ஐயப்பா
ஓம் அன்னதான பிரபுவே சரணம் ஐயப்பா
ஓம் ஆறுமுகன் சோதரனே சரணம் ஐயப்பா
ஓம் ஆபத்தில் காப்பவனே சரணம் ஐயப்பா
ஓம் இன்தமிழ்ச் சுவையே சரணம் ஐயப்பா
ஓம் இச்சை தவிர்ப்பவனே சரணம் ஐயப்பா
ஓம் ஈசனின் திருமகனே சரணம் ஐயப்பா
ஓம் ஈடில்லாத் தெய்வமே சரணம் ஐயப்பா
ஓம் உண்மைப்பரம் பொருளே சரணம் ஐயப்பா
ஓம் உலகாளும் காவலனே சரணம் ஐயப்பா
ஓம் ஊமைக்கருள் புரிந்தவனே சரணம் ஐயப்பா
ஓம் ஊழ்வினைகள் அழிப்பவனே சரணம் ஐயப்பா
ஓம் எளியோர்க்கு அருள்பவனே சரணம் ஐயப்பா
ஓம் எங்கள் குல தெய்வமே சரணம் ஐயப்பா
ஓம் ஏழைப் பங்காளனே சரணம் ஐயப்பா
ஓம் ஏகாந்த மூர்த்தியே சரணம் ஐயப்பா
ஓம் ஐங்கரன் தம்பியே சரணம் ஐயப்பா
ஓம் ஐயமெல்லாம் தீர்ப்பவனே சரணம் ஐயப்பா
ஓம் ஒப்பில்லாத் திருமணியே சரணம் ஐயப்பா
ஓம் ஒளிரும் திருவிளக்கே சரணம் ஐயப்பா
ஓம் ஓங்காரப் பரம்பொருளே சரணம் ஐயப்பா
ஓம் ஓதும் மறைபொருளே சரணம் ஐயப்பா
ஓம் ஔடதங்கள் அருள்பவனே சரணம் ஐயப்பா
ஓம் சௌபாக்கியம் அளிப்பவனே சரணம் ஐயப்பா
ஓம் கலியுகவரதனே சரணம் ஐயப்பா
ஓம் சபரிமலை சாஸ்தாவே சரணம் ஐயப்பா
ஓம் சிவன்மால் திருமகனே சரணம் ஐயப்பா
ஓம் சிவவைணவ ஐக்கியமே சரணம் ஐயப்பா
ஓம் அச்சங்கோவில் அரசே சரணம் ஐயப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஆரியங்காவு ஐயாவே சரணம் ஐயப்பா
ஓம் குளத்துப்புழைப் பாலனே சரணம் ஐயப்பா
ஓம் பொன்னம்பல வாசனே சரணம் ஐயப்பா
ஓம் வில்லாளி வீரனே சரணம் ஐயப்பா
ஓம் வீரமணிகண்டனே சரணம் ஐயப்பா
ஓம் உத்திரத்தில் உதித்தவனே சரணம் ஐயப்பா
ஓம் உத்தமனே சத்தியனே சரணம் ஐயப்பா
ஓம் பம்பையிலே பிறந்தவனே சரணம் ஐயப்பா
ஓம் பந்தள மாமணியே சரணம் ஐயப்பா
ஓம் சகலகலை வல்லோனே சரணம் ஐயப்பா
ஓம் சாந்தம்நிறை மெய்ப்பொருளே சரணம் ஐயப்பா
ஓம் குருமகனின் குறைதீர்த்தவனே சரணம் ஐயப்பா
ஓம் குருதட்சணை அளித்தவனே சரணம் ஐயப்பா
ஓம் புலிப்பாலை கொணர்ந்தவனே சரணம் ஐயப்பா
ஓம் வன்புலியின் வாகனனே சரணம் ஐயப்பா
ஓம் தாயின் நோய் தீர்த்தவனே சரணம் ஐயப்பா
ஓம் குருவின் குருவே சரணம் ஐயப்பா
ஓம் வாபரின் தோழனே சரணம் ஐயப்பா
ஓம் துளசிமணி மார்பனே சரணம் ஐயப்பா
ஓம் தூயவுள்ளம் அளிப்பவனே சரணம் ஐயப்பா
ஓம் இருமுடிப் பிரியனே சரணம் ஐயப்பா
ஓம் எருமேலி தர்மசாஸ்தாவே சரணம் ஐயப்பா
ஓம் நித்திய பிரம்மச்சாரியே சரணம் ஐயப்பா
ஓம் நீலவஸ்திர தாரியே சரணம் ஐயப்பா
ஓம் பேட்டை துள்ளும் பேரருளே சரணம் ஐயப்பா
ஓம் பெரும் ஆணவத்தை அழிப்பவனே சரணம் ஐயப்பா
ஓம் சாஸ்தாவின் நந்தவனமே சரணம் ஐயப்பா
ஓம் சாந்திதரும் பேரழகே சரணம் ஐயப்பா
ஓம் பேரூத்தோடு தரிசனமே சரணம் ஐயப்பா
ஓம் பேதமையை ஒழிப்பவனே சரணம் ஐயப்பா
ஓம் காளைகட்டி நிலையமே சரணம் ஐயப்பா
ஓம் அதிர்வேட்டுப் பிரியனே சரணம் ஐயப்பா
ஓம் அழுதமலை ஏற்றமே சரணம் ஐயப்பா
ஓம் ஆனந்தமிகு பஜனைப் பிரியனே சரணம் ஐயப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் கல்லிடும் குன்றே சரணம் ஐயப்பா
ஓம் உடும்புப்பாறைக் கோட்டையே சரணம் ஐயப்பா
ஓம் இஞ்சிப்பாறைக் கோட்டையே சரணம் ஐயப்பா
ஓம் கரியிலந்தோடே சரணம் ஐயப்பா
ஓம் கரிமலை ஏற்றமே சரணம் ஐயப்பா
ஓம் கரிமலை இறக்கமே சரணம் ஐயப்பா
ஓம் பெரியானை வட்டமே சரணம் ஐயப்பா
ஓம் சிறியானை வட்டமே சரணம் ஐயப்பா
ஓம் பம்பா நதி தீர்த்தமே சரணம் ஐயப்பா
ஓம் பாவமெல்லாம் அழிப்பவனே சரணம் ஐயப்பா
ஓம் திருவேணி சங்கமமே சரணம் ஐயப்பா
ஓம் ஸ்ரீராமர் பாதமே சரணம் ஐயப்பா
ஓம் சக்திபூஜைக் கொண்டவனே சரணம் ஐயப்பா
ஓம் சபரிக்கு அருள் செய்தவனே சரணம் ஐயப்பா
ஓம் தீபஜோதித் திரு ஒளியே சரணம் ஐயப்பா
ஓம் தீராத நோய் தீர்ப்பவனே சரணம் ஐயப்பா
ஓம் பம்பா விளக்கே சரணம் ஐயப்பா
ஓம் பழவினைகள் ஒழிப்பவனே சரணம் ஐயப்பா
ஓம் தென்புலத்தார் வழிபாடே சரணம் ஐயப்பா
ஓம் திருபம்பையின் புண்ணியமே சரணம் ஐயப்பா
ஓம் நீலிமலை ஏற்றமே சரணம் ஐயப்பா
ஓம் நிறைவுள்ளம் தருபவனே சரணம் ஐயப்பா
ஓம் அப்பாச்சிமேடே சரணம் ஐயப்பா
ஓம் இப்பாச்சிக் குழியே சரணம் ஐயப்பா
ஓம் சபரி பீடமே சரணம் ஐயப்பா
ஓம் சரங்குத்தி ஆலே சரணம் ஐயப்பா
ஓம் உரல்குழி தீர்த்தமே சரணம் ஐயப்பா
ஓம் கருப்பண்ண சாமியே சரணம் ஐயப்பா
ஓம் கடுத்த சாமியே சரணம் ஐயப்பா
ஓம் பதினெட்டாம் படியே சரணம் ஐயப்பா
ஓம் பகவானின் சந்நிதியே சரணம் ஐயப்பா
ஓம் பரவசப் பேருணர்வே சரணம் ஐயப்பா
ஓம் பசுவின் நெய் அபிஷேகமே சரணம் ஐயப்பா
ஓம் கற்பூரப் பிரியனே சரணம் ஐயப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| ஓம் நாகராஜப் பிரபுவே | சரணம் ஐயப்பா |
| ஓம் மாளிகைப் புரத்தம்மனே | சரணம் ஐயப்பா |
| ஓம் மஞ்சமாதா திருவருளே | சரணம் ஐயப்பா |
| ஓம் அக்கினிக் குண்டமே | சரணம் ஐயப்பா |
| ஓம் அலங்காரப் பிரியனே | சரணம் ஐயப்பா |
| ஓம் பஸ்மக் குளமே | சரணம் ஐயப்பா |
| ஓம் சற்குரு நாதனே | சரணம் ஐயப்பா |
| ஓம் மகர ஜோதியே | சரணம் ஐயப்பா |
| ஓம் மங்கள மூர்த்தியே | சரணம் ஐயப்பா |

## எங்க கருப்பு சாமி

எங்க கருப்பு சாமி எங்க கருப்பு சாமி
எங்க கருப்பு சாமி எங்க கருப்பு சாமி

அக்கினியில் பிறந்தவராம்
அரனாரின் மைந்தன் அவர் (எங்க கருப்பு சாமி)

முக்கொண்டை காரரவன் - முன்கோபக்காரர் அவன்
சந்தனப் பொட்டுக்காரன், சபரிமலை காவல் காரன்
(எங்க கருப்பு சாமி)

சடைமுடிக் - காரன் அவன், சுவாமிகளை காத்திடுவான்
சல்லடையை கட்டி வாரான், சாஞ்சி சாஞ்சி ஆடி வாரான்
(எங்க கருப்பு சாமி)

வில்லுப்பாட்டு பாடிவாரான், விதவிதமாய் ஆடி வாரான்
பந்தம் கையில் பிடிச்சு வாரான், பாரி வேட்டை ஆடி வாரான்
(எங்க கருப்பு சாமி)

அச்சங்கோவில் ஆண்டவர்க்கு எழிலாக இருப்பவனாம்
பதினெட்டுப் படிகளுக்கும் காவலாக இருப்பவனாம்
(எங்க கருப்பு சாமி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கச்சையை கட்டி வாரான், கையறுவா காட்டி வாரான்
மீசையை முறுக்கி வாரான், முச்சந்தியில் நடந்து வாரான்
(எங்க கருப்பு சாமி)

வில்லாளி வீரனுக்கும் வீரமணி கண்டனுக்கும்
இருமுடியை சுமக்கும் போது பாதுகாக்க வருபவனாம்
(எங்க கருப்பு சாமி)

கற்பூர ஆணி முன்னே, கடவுளாக நின்றிடுவான்
கறுப்பு வேட்டி கட்டிக்கிட்டு, பாவங்களைப் போக்கிடுவான்
(எங்க கருப்பு சாமி)

| | | |
|---|---|---|
| எங்க கருப்ன் வாரான் | - | எங்க கருப்பு சாமி |
| கார்மேகம் போல வாரான் | - | எங்க கருப்பு சாமி |
| அந்தாவரான், இந்தாவாரான் | - | கருப்பு சாமி |
| நாகவழி கொண்டு வாரான் | - | கருப்பு சாமி |
| முன்கோபக் காரன் வாரான் | - | கருப்பு சாமி |
| அருவாளு தூக்கி வாரான் | - | கருப்பு சாமி |
| ஜவ்வாது வாசக் காரன் | - | கருப்பு சாமி |
| வெள்ளிப் பிரம்பு கொண்டு வாரான் | - | கருப்பு சாமி |
| மேகமாக ஆடி வாரான் | - | கருப்பு சாமி |
| வேகமாக ஓடி வாரான் | - | கருப்பு சாமி |
| வாட்டசாட்டமாக வாரான் | - | கருப்பு சாமி |
| பம்பா நதி தீர்த்தத்திலே | - | கருப்பு சாமி |
| கறுப்பன் வரும் வேளையிலே | - | கருப்பு சாமி |
| கரண்ட அளவு தண்ணியிலே | - | கருப்பு சாமி |
| தள்ளிக் கொண்ட வாரானப்பா | - | கருப்பு சாமி |
| சாமி முட்டளவு தண்ணியிலே | - | கருப்பு சாமி |
| மூழ்கிக் கொண்டு வாரானப்பா | - | கருப்பு சாமி |
| அரையளவு தண்ணியிலே | - | கருப்பு சாமி |
| கருப்புசாமி நீந்தி வாரார் | - | கருப்பு சாமி |
| அந்தளவு தண்ணியிலே | - | கருப்பு சாமி |
| பங்காரமா ஓடி வாரார் | - | கருப்பு சாமி |
| எங்க கருப்பன் ஓடி வாரான் | - | கருப்பு சாமி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| பம்பையிலே குளிச்சி வாரான் | - | கருப்பு சாமி |
| பாங்காக வாரான் ஐயா | - | கருப்பு சாமி |
| அந்தா வாரான் இந்தா வாரான் | - | கருப்பு சாமி |
| பெரியானை வட்டம் வாரான் | - | கருப்பு சாமி |
| சிறியானை வட்டம் வாரான் | - | கருப்பு சாமி |
| கரிமலையில் ஏறி வாரான் | - | கருப்பு சாமி |
| பகவதியை வணங்கி வாரான் | - | கருப்பு சாமி |
| இளவந்தனை கடந்து வாரான் | - | கருப்பு சாமி |
| சாமி முக்குழிய தாண்டி வாரான் | - | கருப்பு சாமி |
| அழுதாமேடு உச்சி வாரான் | - | கருப்பு சாமி |
| காளைகட்டி தொட்டு வாரான் | - | கருப்பு சாமி |
| சாமி பூங்காவனம் புகுந்து வாரான் | - | கருப்பு சாமி |
| எருமேலி வாரானப்பா | - | கருப்பு சாமி |
| வாபர் சாமி கூட வாரார் | - | கருப்பு சாமி |

## மங்களம்

மாமலை தன்னில் வாழும் சாஸ்தாவுக்கு மங்களம்
தவமுனிவர் போற்றும் அந்த சன்னதிக்கு மங்களம்
இபமுகவன் முருகனுக்கு இளையவனுக்கு மங்களம்
இன்பமெல்லாம் தந்தருளும் இறைவனுக்கு மங்களம்
புலிமிசையே பவனிவரும் புனிதனுக்க மங்களம்
புவிமயங்கும் மோகினியாள் புதல்வனுக்கு மங்களம்
அன்புடனே அருள்புரியும் ஐயனுக்கு மங்களம்
அழகேவுருவான எங்கள் மெய்யப்பனுக்கு மங்களம்
வெற்றிதரும் வில்லெடுத்த வேந்தனுக்க மங்களம்
வித்தகனாம் வீரமணி கண்டனுக்கு மங்களம்
பம்பைநதி சேருகின்ற பக்தருக்கு மங்களம்
பந்தளன்பேர் பாடுகின்ற அனைவருக்கம் மங்களம்
கந்தர்மடம் தன்னில் வாழும் சாஸ்தாவுக்கு மங்களம்
ஸ்ரீ ஐயப்பா மணிகண்ட சேவா சங்க மங்களம்
மங்களம் மங்களம் நித்திய சுப மங்களம்
மங்களம் மங்களம் நித்திய சுப மங்களம்
நித்திய சுப மங்களம்.
நித்திய சுப மங்களம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# அம்பாள் துதிப் பாடல்

அம்மா அம்மா என் தாயே
ஆறுதல் தந்தெம்மைக் காப்பாயே
இம் மாநிலத்தில் நீதானே
எங்கள் துர்க்கை தாய்தானே (அம்மா அம்மா)

இங்கே நாம்படும் வேதனைகள்
எல்லாம் உனக்குத் தெரியாதோ
எல்லாம் நீயே அறிந்திருந்தும்
ஏனோ எம்மை வாட்டுகின்றாய் (அம்மா அம்மா)

எல்லாப் பிழையும் பொறுத்திடம்மா
தாயே எம்மைக் காத்திடம்மா
பொல்லாப் பெல்லாம் போக்கிடவே
புதுமை ஒன்றைச் செய்திடம்மா (அம்மா அம்மா)

அல்லும் பகலும் அழுகுரல்கள்
எல்லாத் திசையும் வேதனைகள்
பொல்லா வினைகள் சூழ்ந்தெம்மை
புழுவாய்த் துடிக்க வைக்குதம்மா (அம்மா அம்மா)

சொல்லால் வடிக்க முடியாத
துயரம் எமக்கு ஏனம்மா
எம்மால் தாங்க முடியாது
தாயே எம்மைக் காப்பாற்று (அம்மா அம்மா)

ஒன்றா இரண்டா நாம் சொல்ல
உள்ளத்து வேதனை தீராயோ
என்றும் உன்னை நாம் துதித்தும்
ஏனோ எம்மை வாட்டுகின்றாய் (அம்மா அம்மா)


நின்றால் நடந்தால் உன் நினைவு
எங்கும் எதிலும் உன் காட்சி
துன்பம் வராமல் காத்தெமக்கு
துணையாய் என்றும் வந்திடம்மா (அம்மா அம்மா)

- கூட்டு வழிபாட்டு பாமாலை -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச விருட்சம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்

**அமரர். தம்பிப்பிள்ளை பாலசுப்பிரமணியம்**

அவர்கள்

இறைபதமடைந்தவேளை ஆறுதலளித்த உற்றார், உறவினர்கள், அயலவர்கள், நண்பர்கள் அனைவருக்கும், உடன்வந்து உதவி புரிந்தோர்களுக்கும், இறுதிக் கிரியைகளில் நேரில் வந்து கலந்து கொண்டவர்களுக்கும், உள்நாட்டில், வெளிநாட்டிலிருந்து தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம், பதாதைகள் மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும், பல உதவிகளை வழங்கிய அன்பர்களுக்கும், அந்தியேட்டி சபிண்டீகரண கிரியைகளில் கலந்துகொண்ட அனைவருக்கும் எங்கள் உள்ளம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

உடுவில் வீதி,
மருதனார்மடம்.
31-12-2022



இங்ஙனம்
**குடும்பத்தினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கீதாசாரம்

எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது
எது நடக்கின்றதோ அது நன்றாகவே நடக்கின்றது
எது நடக்க இருக்கின்றதோ அதுவும் நன்றாக நடக்கும்
உன்னுடையது எதை இழந்தாய் எதற்காக நீ அழுகின்றாய்?
எதை நீ கொண்டு வந்தாய் அதை நீ இழப்பதற்கு
எதை நீ எடுத்துக் கொண்டாயோ
அது இங்கேயே கொடுக்கப்பட்டுள்ளது
எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றொருவருடையாதாகின்றது
மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும்
இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமுமாகும்.

-பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org